ஊதிய உயர்வுக்கான அரசாணை 293-ஐ அமல்படுத்தக் கோரி சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தினர். படம்: பு.க.பிரவீன்

ஊதிய உயர்வு அரசாணையை அமல்படுத்த கோரி

சென்னையில் அரசு மருத்துவர்கள் உண்ணாவிரதம்

● சென்னை

ஊதிய உயர்வு அரசாணையை அமல்படுத்த கோரி அரசு மருத்துவர்கள் எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே நேற்று உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டத்தில் தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்க மாநிலத் தலைவர் செந்தில், பொதுச் செயலாளர் ரவிசங்கர், தலைமை நிலைய செயலாளர் சந்திரசேகர் உட்பட 100-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

கருணாநிதி முதல்வராக இருந்த போது, அறிவிக்கப்பட்ட அரசாணை 354-ன்படி, பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மற்றும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற அறிவிப்பில் மருத்துவர்கள் சங்கங்களுக்குள் இருவேறு கருத்து நிலவி வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சங்கத்தினர், அரசாணை 293-ஐ அமல்படுத்தகோரி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அரசுத் தரப்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அப்போது, 'அரசாணை 293-ஐ அமல்படுத்த அரசு தயாராக உள்ளது. தகுதி வாய்ந்த மருத்துவர்கள் விண்ணப்பிக்கலாம். நிபுணத்துவம் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவர்கள் நேற்று மாலை கலைந்து சென்றனர்.

ஐஸ்வர்யா வீட்டில் கைவரிசை காட்டிய பணிப்பெண்

ரஜினி, தனுஷ் வீடுகளிலும் நகை திருடினாரா?

● புகாரில் தெரிவிக்கப்பட்டதைவிட அதிக நகைகள் பறிமுதல்

● சென்னை

ஐஸ்வர்யா வீட்டில் நகை திருட்டில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட வேலைக்கார பெண்ணிடமிருந்து, புகாரில் தெரிவிக்கப்பட்டதை விட அதிக நகைகள் பறிமுதல் செய்யப்பட்டதால் அவர் ரஜினி, தனுஷ் வீடுகளிலும் கைவரிசை காட்டினாரா என போலீஸார் விசாரிக்கின்றனர்.

நடிகர் ரஜினிகாந்தின் மகள் ஐஸ்வர்யா தனது வீட்டு லாக்கரில் இருந்த 60 பவுன் நகைகள் திருடப்பட்டுவிட்டதாக தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் கடந்த மாதம் புகார் அளித்தார். அதன்படி, காவல் நிலைய குற்றப்பிரிவு போலீஸார் விசாரணை நடத்தினர்.

முதல் கட்டமாக ஐஸ்வர்யா வீட்டில் வேலை செய்து வந்த சென்னை மந்தைவெளி பள்ளிவாசல் தெருவைச் சேர்ந்த ஈஸ்வரி (46), கார் ஓட்டுநர் திருவேற்காடு மனசுரா கார்டனைச் சேர்ந்த வெங்கடேசன் (44) ஆகிய இருவரிடமும் போலீஸார் விசாரித்தனர். இதில் ஈஸ்வரி, வெங்கடேசன் இருவரும் கூட்டுசேர்ந்து ஐஸ்வர்யா வீட்டில் நகை திருடியதை ஒப்புக் கொண்டனர். இதையடுத்து இருவரையும் போலீஸார் கடந்த 21-ம் தேதி கைது செய்தனர்.

பணிப்பெண் ஈஸ்வரி

அவர்களிடமிருந்து 100 பவுன் தங்க நகைகள், 30 கிராம் வைர நகைகள், 4 கிலோ வெள்ளி பொருட்கள் மற்றும் வீட்டுப் பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டன. ஐஸ்வர்யாவின் வீட்டில் திருடிய நகைகளை விற்று தனது கணவர் அங்கமுத்துவுக்கு அதிக முதலீட்டில் காய்கறி கடையை அமைத்துக் கொடுத்த ஈஸ்வரி, தனது 2-வது மகளுக்கு மளிகைக் கடையும் வைத்து கொடுத்துள்ளார்.

முதல் மகளுக்குத் திருமணம் செய்து வைத்திருப்பதுடன் சோழிங்கநல்லூரில் சுமார் ரூ.9 லட்சத்துக்கு நிலம் வாங்கி போட்டிருப்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது என்று கணவர் அங்கமுத்து, ஈஸ்வரியிடம் போலீஸார் கேள்வி எழுப்பினர். ஆனால், அவர்கள் இருவரும் முன்னுக்குப் பின் முரணாக பதில் அளித்துள்ளனர்.

ஐஸ்வர்யாவின் லாக்கரில் இருந்து ஈஸ்வரி திருடிய நகைகளில் பெரும்பாலானவை ரஜினி சீதனமாகக் கொடுத்தவை. இது தவிர தனுஷ், ஐஸ்வர்யாவை திருமணம் செய்தபோதும் சில நகைகளைப் பரிசாக வழங்கி இருந்தாராம். இப்படி 18 ஆண்டுகளாக தனக்குக் கிடைத்த நகைகளையே ஐஸ்வர்யா லாக்கரில் வைத்து பாதுகாத்து வந்துள்ளார்.

லாக்கர் சாவி ஈஸ்வரியிடம் இருந்துள்ளது. இதை சாதகமாக்கி கொஞ்சம் கொஞ்சமாக ஈஸ்வரி திருடியிருப்பது தெரியவந்துள்ளது.

ஐஸ்வர்யா தனது வீட்டிலிருந்து 60 பவுன் திருடுபோனதாகப் புகாரில் தெரிவித்த நிலையில் 100 பவுனுக்கு மேல் நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது போலீஸாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, கைது செய்யப்பட்ட பணிப்பெண், ஐஸ்வர்யா வீட்டில் மட்டும் அல்லாமல் அவரது தந்தை ரஜினிகாந்த், கணவர் தனுஷ் ஆகியோரது வீடுகளிலும் கைவரிசை காட்டியுள்ளாரா என போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரது வீட்டுக்கும் ஈஸ்வரி சர்வ சாதாரணமாகச் சென்று வந்துள்ளார். எனவே, அந்த கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறது. விசாரணையின் முடிவில் மேலும் பல பரபரப்பு தகவல்கள் வெளியாக வாய்ப்புள்ளதாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட இருசக்கர வாகனங்கள். (உள்படம்) கைது செய்யப்பட்ட பாலமுருகன், சோமேஷ்.

விலை உயர்ந்த பைக்குகளை திருடிவந்த இருவர் கைது

● சென்னை

ஓட்டேரி, அயனாவரம், கீழ்ப்பாக்கம் என சென்னையின் பல்வேறு பகுதிகளில் விலை உயர்ந்த இருசக்கர வாகனங்களை குறிவைத்து திருடியதாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை, கீழ்ப்பாக்கம், புல்லாபுரம் 1-வது தெருவைச் சேர்ந்தவர் சீனிவாசன்(26). இவர் கடந்த ஆண்டு ஏப்ரல் 29-ம் தேதி இரவு வீட்டு வாசலில் அவரது விலை உயர்ந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி இருந்தார். மறுநாள் காலை பார்த்தபோது, அது திருடு போயிருந்தது. அதிர்ச்சி அடைந்த அவர் இதுகுறித்து கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தினர்.

முதல் கட்டமாகச் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தும் துப்பு துலக்கப்பட்டது. இதில், சீனிவாசனின் இருசக்கர வாகனத்தைத் திருடியது ஓட்டேரி பாலா என்ற பாலமுருகன் (18), சூளை சோமேஷ் (21) என்பது தெரியவந்தது. இதையடுத்து தலைமறைவாக இருந்த இருவரையும் போலீஸார் கைது செய்தனர். அவர்களிடமிருந்து திருடப்பட்ட சீனிவாசனின் வாகனம் உட்பட 8 விலை உயர்ந்த இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

விசாரணையில் கைது செய்யப்பட்ட இருவரும் ஓட்டேரி, அயனாவரம், டி.பி.சத்திரம், சிந்தாதிரிப்பேட்டை, நீலாங்கரை, திருமுல்லைவாயல் ஆகிய காவல் நிலைய எல்லையில் விலை உயர்ந்த இருசக்கர வாகனங்களைக் குறிவைத்துத் திருடியது தெரியவந்தது. இதையடுத்து, 2 பேரும் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப் பட்டனர்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள

அனைத்து நாடுகளும் தயாராக இருக்க வேண்டும்

➤ ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி கோபாலசாமி வலியுறுத்தல்

● சென்னை

ரிசர்வ் வங்கி மற்றும் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் இந்திய பொருளாதாரம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல் விவாதம் சென்னை அடையாறில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வை ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரியும், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவருமான என்.கோபாலசாமி தொடங்கி வைத்தார்.

கலந்துரையாடல் குழுவில் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையின் பேராசிரியர் டி.ஜெயராமன், சென்னை பல்கலைக் கழகத்தின் பயன்பாட்டு புவியியல் பேராசிரியர் ஆர்.ஆர்.கிருஷ்ண மூர்த்தி, பொருளாதாரப் பிரிவின் பேராசிரியர் கே.எஸ்.கவிகுமார், உலக வள நிறுவனத்தின் காலநிலை மாற்ற பிரிவின் இயக்குநர் ஏ.அறிவுடைநம்பி ஆகியோர் உறுப்பினர்களாக கலந்து கொண்டு கல்லூரி மாணவர்களுடன் விவாதித்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி என்.கோபாலசாமி பேசிய தாவது: காலநிலை மாற்றம் குறித்து உலகளவில் பல்வேறு ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. வளர்ச்சி அடையாத சிறிய நாடுகள் காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் என்றாலும், அனைத்து நாடுகளும் தனித்தனியாக காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அந்த வகையில், இந்தியா பூஜ்ஜியம் கார்பன் நிலையை அடைய 2070-ம் ஆண்டை இலக்காக நிர்ணயித்துள்ளது.

இன்றையசூழலில் இதுமிகவும்கடினமாகத் தோன்றலாம். சில ஆராய்ச்சி முடிவுகளின்படி 2100-ம் ஆண்டுவரை 2.5 முதல் 3.2 டிகிரி வரை வெப்பநிலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியாது என தெரிவித்துள்ளன. இருந்தாலும் இந்தியா இவற்றை எதிர்கொள்ளதயாராக உள்ளது. இதற்காக சமூகத்தில் நடக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வில் இந்திய ரிசர்வ் வங்கியின் சென்னை மண்டல இயக்குநர் எஸ்.எம்.என்.சுவாமி, சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் ரிசர்வ் வங்கி பிரிவு தலைமை பேராசிரியர் வெங்கடாச்சலம், முன்னாள் ரிசர்வ் வங்கி செயல் இயக்குநர் உமா சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மேலும், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் நூலகத்தில் பொருளாதாரம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த புத்தக கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது.

மந்தைவெளிப்பாக்கம் மேற்கு வட்ட சாலைக்கு

டி.எம்.சவுந்தரராஜன் பெயர் சூட்ட அரசாணை

● சென்னை

பின்னணி பாடகர் மறைந்த டி.எம்.சவுந்தரராஜனின் நூற்றாண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு, அவர் வாழ்ந்த மந்தைவெளிப்பாக்கம் மேற்கு வட்ட சாலையின் பெயர் டி.எம்.சவுந்தர ராஜன் சாலை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து நகராட்சி நிர்வாகத் துறை செயலர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இந்திய ராணுவத்தில் லெப்டினென்ட் ஆகபணியாற்றி, பயங்கரவாதிகளுடன் ஏற்பட்ட சண்டையில் தனது இன்னுயிரை தியாகம் செய்த பார்த்திபனை கவுரவிக்கும் வகையில், அவர் வசித்து வந்த புளியங்குடி நகராட்சிக் குட்பட்ட சிந்தாமணி பகுதி மேலரத வீதியை, 'லெப்டினன்ட் பார்த்திபன் தெரு' என பெயர் மாற்றம் செய்ய, புளியங்குடி நகராட்சிக்கு அனுமதி யளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல், மறைந்த பின்னணி பாடகர் டி.எம்.சவுந்தரராஜனின் 100-வது பிறந்த தினம் மார்ச் 24-ம் தேதி (இன்று) வருவதையொட்டி, சென்னை மாநகராட்சி 9-வது மண்டலம், வார்டு எண் 126-ல் அவர் வசித்து வந்த வீடு அமைந்துள்ள சென்னை மந்தைவெளிப்பாக்கத்தின் மேற்கு வட்ட சாலையின் பெயரை 'டி.எம்.சவுந்தரராஜன் சாலை' என பெயர் மாற்றம் செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு நிதித் துறை, சென்னை-9

தமிழ்நாடு அரசின் 10 மற்றும் 30 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்

1. தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூ.4000 கோடி** மதிப்பில் **ரூ.2000 கோடி** மதிப்புள்ள **10 ஆண்டுக்காலப்** பிணையப் பத்திரங்கள் மற்றும் **ரூ.2000 கோடி** மதிப்புள்ள, **30 ஆண்டுகாலப்** பிணையப் பத்திரங்கள் ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன் வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/–க்கும் அதன் பின்னர் ரூ.10,000/–ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **மார்ச் 28, 2023** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு–II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **மார்ச் 28, 2023** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள்** சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள்** சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் **மார்ச் 28, 2023** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **மார்ச் 29, 2023,** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. தமிழ்நாடு அரசின் 10 மற்றும் 30 ஆண்டுக்கால பிணையப் பத்திரங்களுக்கு ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீகிதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை செப்டம்பர் 29 மற்றும் மார்ச் 29 ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **மார்ச் 23, 2023** நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். **654(L)/W&M-II/2023** மற்றும் **655(L)/W&M-II/2023** –ஐக் காண்க.

நா. முருகானந்தம்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நிதித்துறை, சென்னை–9

செ.ம.தொ.இ/301/வரைகலை/2023

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"